# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## OS.No.132/2014

Deposition of DW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 21.12.2022.

Evidence Recorded Time: 12.01 P.M to 12.05 P.M

| **Name** | : | உமாசங்கர் | **Caste** | : | |
|---|---|---|---|---|---|
| **S/o & W/o.** | : | வெங்கடாஜலம் | **Calling** | : | முதுநிலை வருவாய் ஆய்வாளர், மேட்டூர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:–**

நான் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேட்டூர் வட்டாட்சியருக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் அவர் எனக்கு வழங்கிய சம்மதத்தின் அடிப்படையில் ஆவணங்களோடு இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் மேட்டூர் வட்டம், கொளத்தூர் கிராமம் புல எண்.303/8 மற்றும் 303/9 ஆகிய சர்வே எண்களுக்கான பட்டா, அடங்கல் மற்றும் பட்டா மாறுதல் நடவடிக்கை தொடர்பான ஆவணங்களுடன் சாட்சி சொல்ல அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களை இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து தாக்கல் செய்கிறேன். சர்வே எண்.303/8 மற்றும் 303/9 நிலங்களுக்கான பட்டாவை இத்துடன் ஆஜர் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆகும். அதேபோல மேற்சொன்ன சர்வே எண்களுக்கான நத்தம் அடங்கலை தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.2 ஆகும். மேற்படி இரண்டு சர்வே எண்களும் தற்போது யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் மாரியப்பன் மனைவி கோசலை என்பவர் பெயரில் கடந்த 19.05.2003–ம் வருடம் செய்யப்பட்ட பட்டா மாறுதலின் அடிப்படையில் மேற்படியாரின் பெயர் பதிவாகியுள்ளது. நாளது தேதி வரை மேற்படி நபர் பெயரில்தான் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை உள்ளது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.